பக்திப் பரவசம்

# தமிழ் மங்கையை மணக்க குமரிக்கு வந்த சிவன்!



சத்குரு

இந்தியாவின் வடப்பக்கம் இமயமலைகளில் அரியாசனம் கொண்டிருந்தவர் சிவன். வடஇந்தியாவில் இருக்கும் காசிக்கும், இமயமலைக்கும், கயிலாயத்துக்கும் நம் தமிழ்நாட்டில் இருந்து தவறாது புனிதப் பயணம் மேற்கொள்கிறோம். என்றாலும் தென்னிந்தியாவில் சிவனின் காலடி பட்ட இடம், சிவன் வாழ்ந்த இடம் உண்டு.

விவரம் இதோ...

**சத்குரு:**

சிவனை மணம் முடிக்க ஆசை கொண்டாள், இந்தியாவின் தென்கோடி முனையில் வாழ்ந்த ஓர் இளம் பெண். அவள் பெயர் புண்யாட்சி. ஆழமான உள்வாங்கும் திறனுடனும், 'அருள்வாக்கு' சொல்லும் சக்தியையும் பெற்றிருந்தாள்.

சிவனுக்கு ஏற்ற மாதிரி தன்னை மாற்றிக்கொண்டு, தன்பால் அவரை ஈர்க்க முனைந்தாள். வேறு எதிலும் கவனம் சிதறாமல், சிவனை மணக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே மிகத் தீவிரமாக இருந்தாள்.

ஒரு குறிப்பிட்ட தினத்தை மனதில் நினைத்து, 'அந்த நாள் சூரிய உதயத்துக்கு முன்பு அவர் என்னை மணந்திடாவிட்டால், நான் உடலைத் துறந்துவிடுவேன்' என்று முடிவு செய்தாள்.

அவளது தீவிரம்... எதற்கும் அசையாத சிவனையே உலுக்கியது. அவள் மீது கருணை கொண்டு, அவளை மணம் முடிக்க இசைந்தார். சுடும் கதிரவனாய் கடுந்தவக் கோலம் கொண்டவர்... குளிர் நிலவாய், அன்பு வெள்ளமாய் இமயமலையில் இருந்து குமரிமுனைக்கு பயணப்பட்டார்.

ஆனால், புண்யாட்சி வாழ்ந்துகொண்டிருந்த சமூகத்தால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'அவளின் தெய்வீக சொற்களும், அன்பும், வழிகாட்டுதலும் இனி கிடைக்கப் பெறாமல் போய்விடுமோ?' என வருத்தம் கொண்டனர்.

'இதற்கு தீர்வு என்ன?' என தீவிரமாக ஆலோசித்தனர். 'திருமணத்தை நிறுத்திவிடுவதுதான் இதற்கான ஒரே வழி!' என்று ஊர் மக்கள் கூடிப் பேசி முடிவு எடுத்தனர்.

திருமணம் நடக்க இருக்கும் இடத்துக்கு சிவன் வேகவேகமாக வந்தார். சுசீந்தரம் வழியாக வந்துகொண்டிருந்தபோது அங்கே தங்களது இறுதி சூழ்ச்சியை அந்த ஊர் பெரியவர்கள் அரங்கேற்றினர்.

பெரும் கற்பூரக் குவியலைப் பற்ற வைத்து, அது கொழுந்துவிட்டு எரிய... அதில் இருந்து வெளிப்பட்ட ஒளிக்கற்றைகளை விடிகாலைப் பனி பன்மடங்காகப் பிரதிபலிக்க... அதன் தாக்கம் சூரியோதயம் போல் தோன்றத் தொடங்கியது.

சிவன் அவ்விடத்துக்கு மிக அருகில் இருந்தார். வெறும் 22 கி.மீ. தூரத்தில் இருந்தவர், இதைப் பார்த்து... 'சூரியன் உதித்துவிட்டது. திருமண நேரம் முடிந்துவிட்டது!' என்று நினைத்தவராக வந்த வழியே திரும்பினார்.

இது ஏதும் அறியாத புண்யாட்சி, சிவன் வரவில்லை என்றதும் ஆவேசமானாள். மனம் ஒடிந்து போனாள். அவள் கைதேர்ந்த யோகி ஆதலால், அத்திசையில் இருந்த நிலப்பரப்பின் எல்லைக்குச் சென்று, நின்றபடியே தன் உடலைத் துறந்தாள்.

இன்றளவும் கூட அவள் 'கன்னியாகுமரி'யாக நிற்கும் நிலையிலேயே சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். இந்திய நிலப்பரப்பின் அந்தத் தென்கோடி முனையில் அவளின் திருச்சின்னமாக ஓர் இடம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில்... வந்த வழியே திரும்பிச் செல்ல ஆரம்பித்த சிவன், சரியான நேரத்தில் தான் வர முடியாமல் போனதை எண்ணி மனம் நொந்து தன் மீதே கோபமானார். திரும்பிச் செல்லும் வழியில் தனது மன வேதனையையும், கோபத்தையும் ஆற்றிக்கொள்ள இடம் தேடினார். வெள்ளியங்கிரி மலையைப் பார்த்துவிட்டு, அதில் ஏறி உச்சியில் சென்று அமர்ந்துகொண்டார்.

அது... சிவன் வாழ்ந்த மற்ற இடங்களைப் போல் அல்லாமல், முற்றிலும் மாறுபட்ட சக்தி அதிர்வுகள் நிறைந்ததாக மாறியது. காரணம், சிவன் அங்கு ஆனந்த நிலையிலோ அல்லது அசைவற்ற தியானத்திலோ அமரவில்லை.

தன்னைத் தானே நொந்துகொண்டு, தன் மீதே கோபமான நிலையில் உட்கார்ந்திருந்தார். கோபமும், சோர்வுமாய் இங்கே அமர்ந்த சிவனின் சக்தியை ஈர்த்துக் கொண்ட இம்மலையின் அதிர்வுகள், வேறெங்கும் இருப்பதைவிட வித்தியாசமாய்... மிகத் தீவிரமாய் இருக்கும்.

அங்கே பல நாட்கள் சிவன் தங்கி இருந்தார். அதன் பின், தன் மனநிலை மெள்ள மெள்ள அமைதியான பிறகே அங்கிருந்து கிளம்பினார்.

எங்கெல்லாம் சிவன் தங்கி இருந்தாரோ... அந்த இடத்தையெல்லாம் 'திருக்கயிலாயம்' என்று அழைக்கும் வழக்கம் நம்முடைய கலாசாரத்தில் இருந்ததால், இந்த இடம் 'தென் கயிலாயம்' என்றே அழைக்கப்பட்டது.

கயிலாய மலையைப் போல் அடர்ந்த பனிமூட்டம் இங்கே இல்லை என்றாலும், இம்மலையின் சக்தி அதிர்வுகளும்... அதன் அருளும் கயிலாய மலையைப் போன்றதே! தன் திறனிலும், அழகிலும், புனிதத் தன்மையிலும் கயிலாயத்தைவிட குறைந்ததில்லை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல யோகிகளும், ஞானிகளும், துறவிகளும் இந்த மலையின் சக்தியை தம் வளர்ச்சிக்காக பயன்படுத்தி இருக்கின்றனர். கடவுளும் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு இங்கே வாழ்ந்த ஞானியர்களின் உள்நிலை உயர்வாக இருந்தது. அந்த அற்புதமான மனிதர்கள் தமது சக்தியை இதே மலையில் பதித்து வைத்துள்ளனர்!





